இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 26-11-2025

# பா.ஜ.க. கொட்டம் அடக்கிய பஞ்சாப்!

சண்டிகரை தனது ஒன்றிய அரசின் அதிகாரத்துக்குள் கொண்டு வர நினைத்த பா.ஜ.க.வின் சதிச் செயலை வீறு கொண்டு தடுத்துள்ளது பஞ்சாப்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் அதிகாரத்துக்குள் வர மறுக்கும் மாநிலங்களைச் சிதைப்பது பா.ஜ.க. கடைப்பிடிக்கும் பிரித்தாளும் கொள்கை ஆகும். அதனை முதலில் காஷ்மீரில் செய்தார்கள்.

**ஜம்மு - காஷ்மீருக்கு சிறப்புத் தகுதி வழங்கிய, அரசியலமைப்பு சட்டப்பிரிவு 370 ஐ, கடந்த 2019 ஆகஸ்ட் மாதம் 5 ஆம் தேதியன்று ஒன்றிய பா.ஜ., அரசு ரத்து செய்தது. இதையடுத்து அம்மாநிலம், ஜம்மு - காஷ்மீர், லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டன. இதில், சட்ட சபையுடன் கூடிய யூனியன் பிரதேசமாக ஜம்மு - காஷ்மீர் பிரிக்கப்பட்டது. அது முதல் ஜம்மு காஷ்மீருக்கு மாநிலத் தகுதியை விரைவில் தருவோம் என்று பா.ஜ.க. சொல்லி வருகிறது. ஆனால் செய்யவில்லை. அடுத்ததாக பஞ்சாப்பில் செய்யப் பார்த்தார்கள்.**

பா.ஜ.க.வின் பசப்பு அரசியல் எடுபடாத மாநிலமாக பஞ்சாப் இருக்கிறது. அங்கு அவர்களால் ஆட்சிக்கு வர முடியாது. அதனால் பஞ்சாப்பின் முகத்தை, கனத்தை, வலிமையைச் சிதைக்க நினைத்தது பா.ஜ.க.

பஞ்சாப் மாநிலத்தில் இருந்து பிரிக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு அரியானா மாநிலம் உருவாக்கப்பட்டது. அரியானா, பஞ்சாப் ஆகிய இரண்டு மாநிலங்களின் பொதுவான தலைநகராக சண்டிகர் இருந்து வருகிறது. 1984 ஆம் ஆண்டில் பஞ்சாப் ஆளுநரின் கட்டுப்பாட்டில் சண்டிகர் கொண்டு வரப்பட்டது. தலைமைச் செயலாளர் பதவி, ஆளுநரின் ஆலோசகர் பதவியாக மாற்றப்பட்டது.

அதில் இருந்து, ‘சண்டிகர் தங்களுக்குதான் சொந்தம்’ என்று பஞ்சாப், அரியானா ஆகிய இரு மாநிலங்களும் உரிமை கோரி வருகிறார்கள். இந்த பிரச்சினையை சரி செய்வதற்காக சண்டிகர் யூனியன் பிரதேசமாக அமைக்கப்பட்டது. பஞ்சாப் மாநில ஆளுநரே சண்டிகரின் நிர்வாக அதிகாரியாக இருந்து வருகிறார். இது பா.ஜ.க.வின் கண்ணை பல காலமாக உறுத்தி வந்தது.

சண்டிகர் யூனியன் பிரதேச நிர்வாகத்தில் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் அரசியலமைப்பு பிரிவு 240 கொண்டு வருவதற்கான மசோதாவை நிறைவேற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டது. இதற்காக, 131வது அரசியல் சாசன சட்ட திருத்த மசோதாவை வரும் குளிர்கால கூட்டத்தொடரில் அறிமுகப்படுத்தவும் முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியானது.

**இந்த திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டால், அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள், லட்சத்தீவு, தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி, டையூ மற்றும் டாமன், புதுச்சேரி போன்ற யூனியன் பிரதேசங்கள் போல சட்ட சபை கலைக்கப்பட்டால், ஜனாதிபதியின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் சண்டிகர் சென்றுவிடும்.**

**சண்டிகரின் நிர்வாக அதிகாரியாக பஞ்சாப் கவர்னரே தற்போது செயல்பட்டு வரும் சூழலில், இந்த திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டால், சண்டிகருக்கு என தனியாக நிர்வாக அதிகாரி நியமிக்கப்படுவார். இதனை பஞ்சாப் மாநிலம் கடுமையாக எதிர்த்தது.**

இது நடந்தால் சண்டிகர் நிர்வாக அதிகாரியை நியமிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு வழங்கப்படும். அதை வைத்து தாங்கள் எதையும் செய்யலாம் என்று பா.ஜ.க. நினைத்தது. காங்கிரஸ், ஆம் ஆத்மி, அகாலி தளம் உள்ளிட்ட கட்சிகள் இதனைக் கடுமையாக எதிர்க்கின்றன. “சண்டிகர் பஞ்சாப்புக்குச் சொந்தமானது.” என்ற குரல் அதிகரித்து கொண்டிருக்கிறது. ‘பஞ்சாப் மாநிலத்தில் இருந்து சண்டிகரை பிரிக்க நினைக்கும் முயற்சி’ என்று பஞ்சாப் மாநிலக் கட்சிகள் கடுமையாக எதிர்த்தார்கள்.

ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால், “சண்டிகரில் பஞ்சாப் மாநிலத்திற்கான உரிமையை பா.ஜ.க. பறிக்கிறது. இது அரசியலமைப்பு மீது நடத்தப்படும் தாக்குதல்.” என்று சொல்லி இருக்கிறார். சண்டிகர் மக்களின் அடையாளங்களை அழிப்பதற்கான முயற்சி என பஞ்சாப் மாநில முதல்வர் பகவந்த் மான் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

**அகாலி தளம் கட்சியின் மூத்த தலைவர் ஹர்சிம்ரத் கவுர் பாதல் கூறும்போது, “எந்த ஒரு சர்வாதிகாரி முன்பும் பஞ்சாப்பியர்கள் தலை வணங்க மாட்டார்கள் என்பதை வரலாறு சொல்லும். சண்டிகர் பஞ்சாப் மாநிலத்துக்கு சொந்தமானது” என்றார்.**

காங்கிரஸ் கட்சியின் பொதுவ் செயலாளர் ரன்தீப் சிங் சுர்ஜிவாலா, கூட்டாட்சி மீதான பலவீனப்படுத்தும் தாக்குதல் என கண்டனம் தெரிவித்துள்ளார். “1966 பஞ்சாப் மறுசீரமைப்பு சட்டத்தின் கீழ் இரு மாநில தலைநகராக சண்டிகர் இருக்கும் நிலையில், பஞ்சாப் மற்றும் அரியானா மாநில உரிமைகளின் மீதான தாக்குதலைச் செய்யக் கூடாது. எனது கேள்வி என்னவென்றால், மோடி அரசும் பா.ஜ.க.வும் அரியானா, பஞ்சாப் மாநிலங்களுக்கு விரோதமாக நடந்து கொள்வது ஏன்? சகோதரத்துவத்துடன் இயங்கும் இரண்டு மாநிலங்களிடையே மோதலை உருவாக்குவது ஏன்?” என்ற கேள்வியை எழுப்பி இருந்தார்.

இந்த நிலையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் தனது முடிவில் இருந்து பின் வாங்கி உள்ளார். “தற்போது வரை அதில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. சண்டிகர், யூனியன் பிரதேசத்தின் பாரம்பரிய நிர்வாக கட்டமைப்பை மாற்றும் நோக்கம் மத்திய அரசுக்கு இல்லை” என்று சொல்லி இருக்கிறார்கள். குளிர்காலக் கூட்டத் தொடரில் இதனைக் கொண்டு வரும் திட்டமில்லை என்று பின் வாங்கி விட்டது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

**பஞ்சாப்பில் குழப்பத்தை ஏற்படுத்த நினைத்தது பா.ஜ.க. அதன் கொட்டத்தை அடக்கி விட்டது பஞ்சாப்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.11.2025) கோயம்புத்தூர், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவிலான செம்மொழிப் பூங்காவிற்கு, முதற்கட்டமாக 45 ஏக்கர் பரப்பளவில் 208.50 கோடி ரூபாய் செலவில் உலகத்தரத்தில் பல்வேறு நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்காவினை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, மு.பெ. சாமிநாதன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி மற்றும் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 76 ஆம் ஆண்டையொட்டி

# முகப்புரை வாசித்தல்! பள்ளி - கல்லூரிகளில் பல்வேறு போட்டிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, நவ. 26-**

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 76ஆம் ஆண்டினையொட்டி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்கவும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பல்வேறு போட்டிகளை நடத்திடவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இது குறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 76ஆம் ஆண்டினையொட்டி அரசு அலுவலகங்கள், அரசு சார்ந்த மற்றும் தன்னாட்சி நிறுவனங்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்கவும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பல்வேறு போட்டிகளை நடத்திடவும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை உள்ளடக்கி இந்தியத் திருநாட்டினை வளமான பாதையில் முன்னெடுத்து செல்லும் ஓர் உன்னத உருவாக்கம், அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வடிவமைத்துத் தந்த நமது அரசியலமைப்புச் சட்டமாகும்.

தமிழ்நாடு அரசு, இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளைப் போற்றிப் பாதுகாத்து, சமூகநீதி, சமநிலை மற்றும் மக்கள் நலனிற்காக அயராது பாடுபட்டு வருகிறது.

தமிழ்நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதும், ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு, சகோதரத்துவம் மற்றும் பொதுநலத்தை உறுதிப்படுத்துவதும், தமிழ்நாடு அரசின் தலையாய நோக்கம் ஆகும். கூட்டாட்சிக் கோட்பாடுகளுக்குட்பட்டு, மாநில சுயாட்சியே தமிழ்நாட்டின் நிலைப்பாடாகும். தமிழ்நாடு அரசு, அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றி மாநிலத்தின் வளர்ச்சி நோக்கி தொடர்ந்து செயல்படும் அரசாக இயங்கி வருகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான சிறப்பு வழிவகைகளை உருவாக்க மாநில அரசிற்கு அதிகாரம் அளிக்கும் அரசியலமைப்பின் 15(3)வது பிரிவின் முக்கியத்துவத்தை முழுமையாக உணர்ந்தமையால், தனது செயல்பாடுகளில், விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை வகுத்து சிறப்பான முறையில் அவற்றை செயல்படுத்தி, அரசியலமைப்பின்படி மகளிர் மற்றும் சிறார்களின் அடிப்படை உரிமைகளை மேலோங்க செய்வதில் இவ்வரசு பெருமை கொள்கிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 76வது ஆண்டினை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் இன்று 26.11.2025 நாளன்று காலை 11 மணிக்கு தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும், மாண்பமை உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை தலைமை அலுவலகங்கள், அனைத்து சார்நிலை அரசு அலுவலகங்கள், மாநில அரசின் அனைத்து அலுவலகங்கள், தன்னாட்சி அதிகார அமைப்புகள், நிறுவனங்கள், தன்னாட்சி அரசு நிறுவனங்கள், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்டுபாடுகள் மற்றும் அரசியலமைப்பு நெறிமுறைகள் பற்றிய பேச்சுப் போட்டிகள்/ கருத்தரங்குகள்/ வினாடி வினா நிகழ்ச்சிகளை நடத்தவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உலகளாவிய முதலீடுகளை ஈர்க்கும் வகையில்

# கோவையில் தமிழ்நாடு ரைசிங் உச்சி மாநாடு!

## ‘தி இந்து’ நாளேடு செய்தி!

**சென்னை, நவ. 26-**

**உலகளாவிய முதலீடுகளை ஈர்க்கும் வகையில் தொழிற் துறையில் கோவை மாநகரை நிலை நிறுத்தும் நோக்கில் அங்கு தமிழ்நாடு ரைசிங் உச்சி மாநாடு நடைபெறுவதாக ‘தி இந்து’ நாளேட்டில் செய்திக் கட்டுரை வெளியாகி உள்ளது.**

அது வருமாறு:-



THE HINDU 25 NOV 2025

Tamil Nadu to seal major deals at TN Rising summit in Coimbatore

All the Memoranda of Understanding will be signed and exchanged in the presence of Chief Minister M.K. Stalin and Industries Minister T.R.B. Rajaa

Sangeetha Kandavel
CHENNAI

The Tamil Nadu government is poised to sign a slew of Memoranda of Understanding (MoUs) in the aerospace and defence sectors at the upcoming TN Rising Summit in Coimbatore on November 25, ... Chennai zone and will create over 1,800 high-value jobs, the source claimed. Tamil Nadu's electronics sector is also set to attract significant capital at the summit, with Singapore-based Caliber Interconnects ... Singapore investor TD ... ments into advanced electronics, auto electronics, aerospace & defence, drones and small aircraft, and digital infrastructure including data centres and GCCs. The city will also promote precision manufacturing for aerospace and defence, a growing aviation ecosystem, and robust IT and R&D infras-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா முன்னிலையில் கோயம்புத்தூரில் நடைபெறும் TN Rising உச்சி மாநாட்டில் தமிழ்நாடு முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட உள்ளது.

நவம்பர் 25, 2025 அன்று கோயம்புத்தூரில் நடைபெறவிருக்கும் TN ரைசிங் உச்சி மாநாட்டில், விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறைகளில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் (MoU) கையெழுத்திட தமிழக அரசு தயாராக உள்ளது. மாநில அரசு வட்டாரங்களின் படி, VAF ஏரோ சிஸ்டம்ஸுடன் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாகும், மேலும் நிறுவனம் சுமார் 510 கோடி முதலீடு செய்யும்.

சக்தி விமானத் தொழில் நிறுவனம் 500 கோடி முதலீடு செய்து 1,200 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ளதாக வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்கிடையில், ஃபோவியா டெக் நிறுவனம் ட்ரோன் உற்பத்திக்காக 200 கோடியை முதலீடு செய்யும். மினெர்வா சிறப்பு நோக்க வாகனம் (51 கோடி); சிங்குலாரிட்டி ஏரோஸ்பேஸ் (50 கோடி) மற்றும் எதிர் நடவடிக்கைகள் தொழில்நுட்பங்கள் (50 கோடி) உள்ளிட்ட பிற நிறுவனங்களும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் என்று அவர்கள் கூறினர்.

TN Rising Summitக்காக அறிவிக்கப்பட்டுள்ள முக்கிய அறிவிப்புகளில் STT Global Data Centre உடனான 4,200 கோடி முதலீட்டு ஒப்பந்தமும் அடங்கும். இந்த குறிப்பிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் சென்னை மண்டலத்தைப் பற்றியது மற்றும் 1,800 க்கும் மேற்பட்ட உயர் மதிப்புள்ள வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று அந்த வட்டாரம் தெரிவித்துள்ளது.

இந்த உச்சிமாநாட்டில் தமிழ்நாட்டின் மின்னணுத் துறையும் குறிப்பிடத்தக்க மூலதனத்தை ஈர்க்க உள்ளது, சிங்கப்பூரை தளமாகக் கொண்ட காலிபர் இன்டர்கனெக்ஸ் 3,000 கோடியை உறுதியளிக்கிறது மற்றும் சக சிங்கப்பூர் முதலீட்டாளர் டிடி கோனெக்ஸ் 1,057 கோடி மதிப்புள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட தயாராக உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தை தலைமையிடமாகக் கொண்ட, உள்நாட்டு மின்னணு பாகங்கள் உற்பத்தியாளரான சான்கிராஃப்ட் இண்டஸ்ட்ரீஸ், 400 கோடி முதலீட்டில் தமிழ்நாட்டில் விரிவாக்கத் திட்டத்தை அறிவித்துள்ளது. மொபைல் மற்றும் தொலைத்தொடர்பு மின்னணு துறைகளுக்கு சேவை செய்வதற்காக அதன் உற்பத்தி தடத்தை அதிகரிக்கவும், அதன் தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பு திறன்களை வலுப்படுத்தவும் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்த அனைத்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் செவ்வாய்க்கிழமை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா முன்னிலையில் கையெழுத்திடப்பட்டு பரிமாறிக்கொள்ளப்படும்.

கோயம்புத்தூர் தன்னை ஒரு உயர் தொழில்நுட்ப தொழில்துறை மற்றும் கண்டுபிடிப்பு மையமாக மாற்றிக் கொள்கிறது. இந்த ஆண்டு மாநாடு மேம்பட்ட மின்னணுவியல், ஆட்டோ மின்னணுவியல், விண்வெளி மற்றும் பாதுகாப்பு, ட்ரோன்கள் மற்றும் சிறிய விமானங்கள் மற்றும் தரவு மையங்கள் மற்றும் ஜி.சி.சி உள்ளிட்ட டிஜிட்டல் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் முதலீடுகளை ஈர்ப்பதில் கவனம் செலுத்துகிறது.

விண்வெளி மற்றும் பாதுகாப்புக்கான துல்லியமான உற்பத்தி, வளர்ந்து வரும் விமான சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் உலகளாவிய திறன் மையங்களை ஈர்க்க வலுவான தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு உள்கட்டமைப்பு ஆகியவற்றை இந்த நகரம் ஊக்குவிக்கும். உலகளாவிய முதலீட்டாளர்களை ஈர்க்கும் மற்றும் உயர் திறன் வேலைகளை உருவாக்கும் எதிர்காலத்திற்குத் தயாராக உள்ள தொழில்துறை, புதுமை மற்றும் சேவை இடமாக கோயம்புத்தூரை நிலைநிறுத்துவதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

கோயம்புத்தூர் பதிப்பு மூன்றாவது TN ரைசிங் உச்சி மாநாட்டைக் குறிக்கிறது. முதல் TN ரைசிங் நிகழ்வு தூத்துக்குடியில் நடைபெற்றது, அங்கு அரசாங்கம் 32,554 கோடி மதிப்புள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. ஓசூரில் நடைபெற்ற இரண்டாவது பதிப்பில், 24,307 கோடி மதிப்புள்ள முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தானன. பிராந்தியங்கள் முழுவதும் சீரான மற்றும் உள்ளடக்கிய தொழில்துறை வளர்ச்சியை முன்னெடுப்பதற்கான பரந்த குறிக்கோளுடன், மாநிலத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் புதிய முதலீடுகளைச் செலுத்துவதற்காக தமிழ்நாடு அரசு TN ரைசிங் உச்சி மாநாட்டைத் தொடங்கியது.






வடகிழக்கு பருவமழையொட்டி தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக பரவலாக மழை பெய்து வரும் நிலையில் தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் திருவைகுண்டம் அணைக்கட்டில் இருந்து 19 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது இந்த நிலையில் திருவைகுண்டம் அணைக்கட்டு, ஏரல் தாமிரபரணி ஆற்று தரைப்பாலம், ஆத்தூர் – முக்காணி சந்திப்பில் தாமிரபரணி ஆற்று பாலம், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றை நேரில் சென்று கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆய்வு மேற்கொண்டார். உடன் அமைச்சர் பெ.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மேயர் ஜெகன் பெரியசாமி, கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா, ஒன்றியச் செயலாளர் ஏ.பி.சதிஷ் குமார் மற்றும் பலர் உடனிருந்தனர்.